## 2.15 2005–06 ஆம் ஆண்டுக்கான முன்னுரிமைப் பணிகளுக்கான ஒதுக்கீட்டினை மாற்றியமைத்தல் – 1991–க்கு முன்பாக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூ.35.00 இலட்சம் ஒதுக்கீடு

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.157 நாள் : 24.11.2005

படிக்க :

1) அரசாணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் துறை நாள்.19.06.2002
2) அரசாணை(நிலை) எண்.120, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.29.07.2004
3) அரசாணை (நிலை) எண்.30, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.10.03.2005
4) அரசாணை (நிலை) எண்.59, ஊரக வளர்ச்சித் துறை, நாள்03.05.2005
5) அரசாணை (நிலை) எண்.116, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.18.08.2005
6) அரசாணை (நிலை) எண்.127, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.09.2005
7) ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண்.23954.05.என்இடிஎம்.3.நாள்.21.09.2005

**ஆணை**

அரசாணை நிலை எண்.59, ஊரக வளர்ச்சித்துறை, நாள்.03.05.2005–ல் 2005–2006–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், முன்னுரிமை மற்றும் இதரப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்து அரசு ஆணை பிறப்பித்தது.

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| குடிநீர்ப் பணிகள் | 5.00 |
| நமது கிராமம் திட்டம் | 10.00 |
| மாணவரில்லங்கள் கட்டுதல் | 5.00 |
| கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்க | 10.00 |
| தெருவிளக்குகள் | 5.00 |
| தொகுப்பு வீடுகள் பழுது பார்க்க | 25.00 |
| இதரப் பணிகளுக்கு | 40.00 |
| மொத்தம் | 100.00 |

2. அரசாணை நிலை) எண்.116, ஊரக வளர்ச்சித்துறை, நாள்.18.08.2005ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் முன்னுரிமைப் பணிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நமது கிராமம், கிராம ஊராட்சிளில் சிமெண்ட் சாலைகள் அமைத்தல், தொகுப்பு வீடுகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் மாநகராட்சி மற்றும் நகர்ப்புறங்களை மட்டுமே கொண்ட தொகுதிகளில் மேற்கொள்ள இயலாது என்பதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அவ்வாணையில் குறிப்பிடப்பட்ட மாற்றுப் பணிகளைச் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

3. அரசாணை (நிலை) எண்.127, ஊரக வளர்ச்சித்துறை, நாள்.16.09.2005–ன்படி நமது கிராமம் திட்டத்திற்காக மொத்தத் தொகையையும் (ரூ.180.50 கோடி) மாநில அரசின் நிதியிலிருந்தே வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. ஊரக வளர்ச்சி இயக்குநர், ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2005–2006ம் ஆண்டிற்கு நமது கிராமம் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.10,00,000/–ஐ தற்பொழுது வேறுபணிகளளுக்கு மாற்றி ஒதுக்கீடு செய்ய வேண்டும். பெரும்பாலான மாவட்டங்களில் பொதுமக்களிடம் தொகுப்பு வீடுகளை பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ள ஏகோபித்த வரவேற்பு இருப்பதால், மேற்படி நிதியை வீடுகள் பழுது பார்க்கும் பணிக்கு ஒதுக்கீடு செய்வதன் மூலம் அதிக அளவில் தொகுப்பு வீடுகளை பழுது பார்க்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதாலும் தொகுப்பு வீடுகள் பழுது பார்க்கும் பணிகளுக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள

ரூ.25,00,000/–த்துடன் நமது கிராமத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன்படுத்தப்படாததால் மறு ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ள ரூ.10,00,000/–ஐயும் சேர்த்து, ரூ.35,00,000/–ஐ 1991–ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை பழுது பார்க்கும் பணிகளுக்கு செலவிட ஆணை வழங்க வேண்டியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பை ஆய்வு செய்த அரசு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் தொகுப்பு வீடுகள் பழுது பார்க்கும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.25,00,000/–த்துடன் (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்) நமது கிராமம் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டு (ஊரகக் தொகுதிகள்) (Rural Constitutency) பயன்படுத்தப்படாமல் வேறு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ள ரூ.10,00,000/–ஐயும் (ரூபாய் பத்து இலட்சம்) சேர்த்து, 2005–2006ஆம் ஆண்டில், 1991க்கு முன்னர் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுது பார்க்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.35,00,000/–ஆக (ரூபாய் 35 இலட்சம்) ஒதுக்கீட்டினை உயர்த்தி அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.82837/ஊ.வ/2005–01/ நாள்.24.11.2005 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்